தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

9.04.2013 A.M

## சூறைக் காற்றுடன் மழை: வாடிப்பட்டியில் வாழைகள் சேதம், மின்கம்பங்கள் சாய்ந்தன

மதுரை ஊரகப் பகுதியில், ஞாயிறு மாலை திடீரென சூறைக் காற்றுடன் பெய்த கனமழையால் வாடிப்பட்டி, சோழவந்தான் பகுதிகளில் வாழை மரங்கள் சேதமடைந்தன. மேலும், மின்கம்பங்கள் சேதத்தால் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக மதுரை பகுதியில் கடும் வெப்பம் கொளுத்தி வருகிறது. தினமும் பகலில் 100 டிகிரிக்கும் மேலாக வெப்பம் இருப்பதால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில், ஞாயிறு மாலை மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

வாடிப்பட்டி, சோழவந்தான் பகுதிகளில் பலத்த காற்று, இடி, மின்னலுடன் மழை பெய்தது.

வாடிப்பட்டி, கச்சைகட்டி, பூச்சம்பட்டி, சொக்கலிங்கபுரம், விராலிபட்டி, குட்லாடம்பட்டி, நீரேத்தான், தாதம்பட்டி, குலேசகரன் கோட்டை ஆகிய பகுதிகளில் விவசாயிகளது வாழை மரங்களும், சாலையோர மரங்களும் சாய்ந்தன.

வல்லபகணபதி பகுதியில் சுமார் ரூ. 1.50 லட்சம் மதிப்பு வாழை மரங்களும், சொக்கலிங்கபுரத்திலும் 1 ஏக்கர் பரப்பிலான வாழை மரங்களும் முற்றிலும் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது.

வாடிப்பட்டி பால் பண்ணை, தெத்தூர், தாதம்பட்டி பகுதிகளில் சாலையோர மரங்கள் முறிந்து, மின்கம்பங்களில் விழுந்ததால் மின்சாரம் தடைப்பட்டது. மின்வாரிய ஊழியர்கள் திங்கள்கிழமை மின் கம்பங்களைச் சீர்செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

சோழவந்தான் பகுதியில் பலத்த காற்றுடன் ஞாயிறு மாலை பெய்த மழையால், ரிஷபம் பகுதியில் விவசாயிகளின் தோட்டத்தில் இருந்த 2 ஏக்கர் வாழை மரங்கள் சாய்ந்து சேதமடைந்ததாக கூறப்படுகிறது.

## விலையில்லா கறவை மாடுகள் மூலம் தமிழகத்தில் வெண்மைப் புரட்சி

தமிழக முதல்வர் வழங்கியுள்ள விலையில்லா கறவை மாடுகள் மூலம் கூடுதலாக பால் உற்பத்தியாகி, தமிழகத்தில் வெண்மைப் புரட்சி ஏற்பட்டுள்ளதாக, ஆண்டிபட்டி அருகே பிச்சம்பட்டியில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவில் நிதியமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் கூறினார்.

ஆண்டிபட்டி அருகே பிச்சம்பட்டி மற்றும் கோவில்பட்டியில் 7,111 பயனாளிகளுக்கு, 2.88 கோடி மதிப்பிலான விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் விழாவில் தமிழக நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பேசியதாவது: தமிழக அரசு மக்கள் வாழ்வில் வளம் பெறவேண்டும் என்ற நோக்கில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படுகின்ற வரி வசூல் நிதி, மக்களுக்கே சென்றடைய வேண்டும் என்கிற நோக்கில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தமிழக முதல்வர் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு சுமார் 21 லட்சமாக இருந்த பால் உற்பத்தியை 27 லட்சமாக மாற்றி, சாதனை படைத்து தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சி நிகழ்த்தி சாதனை படைத்துள்ளார். மேலும் பொதுமக்க ளின் நலன் கருதி, மக்களை நாடி வருவாய் துறை என்ற அம்மா திட்டத்தினை அறிவித்தார். இத்திட்டம் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்று வருகிறது. இச்சிறப்பு முகாமில் பொதுமக்களால் வழங்கப்பட்ட மனுக்களை உடனடியாக பரிசீலனை செய்து, தகுதியுள்ள நபர்களுக்கு உடனடியாக உரிய நிவாரணம் வழங்கப்படும் என்றார்.

முன்னதாக இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. விஜயராணி வரவேற்புரையாற்றினார். மாவட்ட ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் எஸ். மாகாலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். ஆண்டிபட்டி சட்டப்பேரவை உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் முன்னிலை வகித்தார். தேனி மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் பிச்சம்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் ஆர். தியாகராஜன், துணைத் தலைவர் வி. அழகர்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் கனகராசன், கடமலை-மயிலை ஒன்றியக்குழுத் தலைவர் முருக்கோடை ராமர் மற்றும் வட்டாட்சியர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு திட்ட துணை ஆட்சியர் சுந்தரராஜன் நன்றி கூறினார்.

## ரூ.7 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்கோபி,

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.7 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம் போனது.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது.

சனிக்கிழமை நடைபெற்ற வாழைத்தார் ஏல விலை விவரம்: கதளி கிலோ ரூ.16, நேந்திரன் ரூ.18, செவ்வாழை 1 தார் ரூ.440, பூவன் 1 தார் ரூ.300, ரொபஸ்டோ 1 தார் ரூ.270, ரஸ்தாளி 1 தார் ரூ.325, மொந்தன் 1 தார் ரூ.225, பச்சைநாடன் 1 தார் ரூ.200, தேன்வாழை 1 தார் ரூ.500. ரூ. 7 லட்சம் மதிப்பிலான 9 ஆயிரத்து 500 தார்கள் விற்பனைக்காக ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. கோபி, ஈரோடு, பெருந்துறை, அந்தியூர், அம்மாப்பேட்டை, குன்னத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் பங்கேற்றனர்.

தேங்காய் ஏல விலை விவரம்: தேங்காய் ஒன்று அதிகபட்சமாக ரூ.7.80 பைசாவுக்கும், குறைந்தபட்சமாக ரூ.4.50 பைசாவுக்கும் ஏலம் போனது. 7 ஆயிரம் தேங்காய்கள் ரூ.40 ஆயிரத்துக்கு விற்பனையாகியது. கோபி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் இருந்து விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கலந்துகொண்டனர்.

## கரும்பு விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா: பாமக கோரிக்கை

ஆரணி பகுதியில் கரும்பு வெட்டி அனுப்பி 2 மாதங்களாகியும் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா வழங்காமல் உள்ளனர். இதனை உடனடியாக வழங்க வேண்டும் என பாமக கோரிக்கை விடுத்துள்ளது.

ஆரணியை அடுத்த முள்ளண்டிரம் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாமக கிளைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு கிளைத் தலைவர் பி.சாம்பசிவம் தலைமை தாங்கினார். கிளைப் பொருளாளர் ராஜா வரவேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக வன்னியர் சங்க மாவட்டச் செயலர் சேவூர் ஆ.குமார், பேராசிரியர் கு.சிவா, ஒன்றியச் செயலர் மு.மெய்யழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஆரணி பகுதி விவசாயிகள் கரும்பை வெட்டி ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பினர். ஆனால் 2 மாதங்கள் ஆகியும் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இப்பணப் பட்டுவாடாவை ஆலை நிர்வாகம் உடனடியாக வழங்க வேண்டும்.

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு தடையில்லா மின்சாரம் மற்றும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். ஆரணியிலிருந்து முள்ளண்டிரம் வழியாக குருகுலம், மூலத்தாங்கல், கிட்டன்குடிசை ஆகிய கிராமங்களுக்கு அரசுப் பேருந்தை இயக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், பாமகவைச் சேர்ந்த அழகேசன், பாண்டியன், முருகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### மேட்டூர் அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்க நடவடிக்கை

குடிநீர்த் திட்டங்களுக்காக மேட்டூர் அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்க ஆட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நாமக்கல் நகர்மன்றத் தலைவர் ஆர்.கரிகாலன் தெரிவித்தார்.

நாமக்கல் நகர்மன்ற

உறுப்பினர்கள் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில், அதிகரித்து வரும் குடிநீர் பற்றாக்குறை குறித்து நகர்மன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பியதுடன், பிரச்னையைத் தீர்க்க நகராட்சிக்கு உள்பட்ட 39 வார்டுகளிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதற்கு நகர்மன்றத் தலைவர் ஆர்.கரிகாலன் பதிலளித்து பேசியது:

நாமக்கல் நகராட்சிக்கு குடிநீர் விநியோகிக்க தற்போது 3 குடிநீர்த் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுத்துவரப்படும் அந்தக் குடிநீர் திட்டங்களுக்காக மோகனூர் பகுதியில் ஆற்றில் 9 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால், 9 கிணறுகளிலும் தண்ணீர் குறைந்துவிட்டது.

மேலும், மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் விநாடிக்கு 500 கனஅடி தண்ணீரை விவசாயத்துக்கும் பயன்படுத்துவதால் பரமத்திவேலூர் பகுதியிலேயே முடிந்துவிடுகிறது.

இதனால், மோகனூர் பகுதியிலிருந்து குடிநீர் ஆதாரங்களுக்கான தண்ணீர் குறைந்துவிடுகிறது.

இதனால் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறை பிரச்னையை அடுத்து குடிநீர் திட்டங்களுக்காக மட்டும் மேட்டூர் அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று

ஆட்சியருக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. தவிர, நகராட்சியின் 39 வார்டுகளிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பது குறித்தும் பரிசீலிக்கப்படும் என்றார் அவர்.

## சூறாவளி காற்று: லாலாபேட்டை பகுதியில் வாழைகள் சேதம்

கரூர் மாவட்டம், லாலாப்பேட்டை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட சூறாவளிக் காற்றால் வாழை, வெற்றிலைக் கொடிக்கால் சேதமடைந்தது.

லாலாப்பேட்டை சுற்று வட்டாரப் பகுதியில் வெற்றிலை, வாழை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் இப்பகுதியில் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால், வாழை,வெற்றிலை, நெல் பயிர்களைக் காப்பாற்ற வயல் வெளிகளில் கிணறு வெட்டியும், ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து தண்ணீர் எடுத்து பாய்ச்சுகின்றனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை லாலாபேட்டை, சிந்தலவாடி, திம்மாச்சிபுரம், பிள்ளபாளையம், வல்லம், வீரவள்ளி, புதுப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் திடீரென சுறாவளி காற்றுடன் மழை பெய்தது. சூறாவளிக் காற்றால் இப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த ஏராளமான வாழைகள் சாய்ந்து சேதமானது. மேலும், காவிரியில் தண்ணீர் இல்லாத காரணத்தால், வாழை உள்ளிட்ட பயிர்களைக் காப்பாற்ற ஆயிரக்கணக்கில் செலவு செய்து ஆழ்குழாய் கிணறு அமைத்துள்ளனர். இந்நிலையில், எதிர்பாராதவிதமாக நேரிட்ட சூறாவளிக்காற்றால் வாழைகள் சேதமடைந்தது இப்பகுதி விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்குமா?

தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிர் அறுவடை சோதனையில் மகசூல் இழப்பு பெரிய அளவில் இல்லை எனக் காட்டப்பட்டுள்ளதால், காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மாவட்டத்தில் நிகழாண்டு ஏறத்தாழ 3 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட்டாலும், காவிரி நீர் வரத்து, பருவ மழைப் பற்றாக்குறையால் மகசூல் இழப்பு ஏற்பட்டது.

இந்தப் பாதிப்பிலிருந்து விவசாயிகளைக் காப்பதற்காகத் தமிழக அரசு அனைத்து விவசாயிகளையும் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் இணைத்தது. மேலும், கடன் பெறா விவசாயிகளுக்கான பிரிமியத்தையும் அரசே செலுத்தியது.

கடன் பெற்ற விவசாயிகளுக்கு வழக்கம்போல சம்பந்தப்பட்ட வங்கியிலேயே பிரிமியம் பிடித்தம் செய்யப்பட்டது. மாவட்டத்தில் மொத்தத்தில் 1.66 லட்சம் விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டனர்.

இந்நிலையில், 50 சதத்துக்கும் அதிகமான பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கு தமிழக அரசு ரூ. 15,000 வீதம் வறட்சி நிவாரணத் தொகையை வழங்கியது. மாவட்டத்தில் இந்த நிவாரணத் தொகை 12,249 ஏக்கருக்கு மட்டும் கிடைத்தது.

எனவே, மாவட்டத்தில் 50 சதத்துக்கும் அதிகமாக மகசூல் இழப்பைச் சந்தித்த விவசாயிகள் ஏராளமானோர் இருக்கும் நிலையில், 11,372 பேருக்கு மட்டுமே நிவாரணத் தொகை வழங்கப்பட்டது என விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி விவசாய சங்கங்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இதனிடையே, காப்பீட்டு செய்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு முன் மகசூல் இழப்பை மதிப்பீடு செய்வதற்காகப் புள்ளியியல் துறையும், வேளாண்மைத் துறையும் இணைந்து பயிர் அறுவடை சோதனையை மேற்கொண்டன.

மாவட்டத்தில் 51 வருவாய் சரகங்களில் (பிர்கா) உள்ள 403 இடங்களில் இந்தப் பயிர் அறுவடை சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில், மாவட்ட அளவில் அதிகபட்சமாக ஹெக்டேருக்கு 7,200 கிலோவும், குறைந்தப்பட்சமாக மகசூல் 0 கிலோ எனவும் மதிப்பிடப்பட்டது. என்றாலும், மாவட்ட அளவில் சராசரி மகசூலாக 4,152 கிலோ என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதில், குறைந்தபட்சமாக ஹெக்டேருக்கு தஞ்சாவூர் ஒன்றியம் பெரம்பூரில் 60 கிலோவும், திருவையாறில் 680 கிலோவும் பதிவாகியுள்ளது. தவிர, மதுக்கூர் ஒன்றியம் பெரியகோட்டை, துவரங்குறிச்சி, பேராவூரணி ஒன்றியம் குறிச்சி, அம்மாபேட்டை ஒன்றியம் மெலட்டூர் ஆகிய இடங்களில் பூஜ்யம் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்தச் சரகங்களில் சராசரி அளவைப் பார்க்கும்போது ஹெக்டேருக்கு 2,500 கிலோவுக்கு அதிகமாக இருக்கிறது.

எனவே, பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்குமா என்பது சந்தேகமாக உள்ளது என வேளாண் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்தது:

வருவாய் சரக அளவில் சராசரி மகசூல் 2,000 கிலோ அல்லது அதற்கும் குறைவாக இழப்பு இருந்தால்தான் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கும் எனத் தெரிகிறது.

ஆனால், பயிர் அறுவடை சோதனையில் மகசூல் அளவு அதிகமாகப் பதிவாகியுள்ளதால், தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை என்றனர்.

எனவே, வறட்சி நிவாரணம் கிடைக்காத நிலையில், பயிர் காப்பீட்டுத் தொகையாவது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த விவசாயிகள் நம்பிக்கையை இழந்து வருகின்றனர்.

பயிர் அறுவடை சோதனை வருவாய் சரக அளவில் சராசரியாக சுமார் 10 இடங்களில் ரேண்டம் அடிப்படையில் வயல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் மேற்கொள்ளப்படுகிறது. இதனால், கணக்கெடுப்பில் பாதிக்கப்பட்ட வயல்கள் விடுபடுகின்றன. எனவே, சரக அளவில் என்பதற்குப் பதிலாக கிராம அளவில் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 26.33 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 26.33 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**9.04.2013 A.M**

---

## பரிசோதனை விதைகளை வாங்கி பயன்படுத்தினால் அதிக மகசூல்: வேளாண்மை அதிகாரி யோசனை

தஞ்சாவூர்: தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு தஞ்சையை தலைமையிடமாகக் கொண்டு, விதை பரிசோதனை அலுவலகம் காட்டுத்தோட்டம் வளாகத்தில் இயங்கி வருகிறது. இங்கு, விதை பரிசோதனை அலுவலராக, வித்யா பொறுப்பேற்று கொண்டு, விதை பரிசோதனை மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, வேளாண்மை அலுவலர்கள் நளினி, திலகவதி உள்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.

தொடர்ந்து, விதை பரிசோதனை அலுவலர் வித்யா கூறியதாவது:

தமிழகத்தில் கோவையை தலைமையிடமாக கொண்டு, விதைச்சான்று மற்றும் அங்கக சான்று துறை இயங்குகிறது. இதன்கீழ் தஞ்சையில் இயங்கும் விதை பரிசோதனை மையம் செயல்படுகிறது. இங்கு, விதைகளை பரிசோதனைக்கு உட்படுத்தி, முடிவுகள் விவசாயிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

விதை மாதிரிகளை பெற்று, தரமான விதைகளை கண்டறிந்து விதை சான்றளிப்பு பிரிவில் சான்று வழங்கப்படும். குறிப்பாக, முளைப்புத்திறன், புறந்தூய்மை, ஈரத்தன்மை, பிறரக கலப்பு விதைகள், களை விதைகள் ஆகியவை பரிசோதித்துல முடிவு அறிவிக்கப்படும்.

இத்தகைய விதைகளை பயன்படுத்தினால், அதிக மகசூல் பெற்று விவசாயிகள் லாபம் பெற முடியும்; மேலும் நஷ்டத்தை தவிர்க்கலாம்.

இதன்படி, 30 ரூபாய் செலுத்தி, விதை பரிசோதனையை விவசாயிகள் மேற்கொண்டு பயன்பெற வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## நாட்டின் மிளகு உற்பத்தி 55 ஆயிரம் டன்னாக உயரும்:சர்வதேச நிலவரங்களால் விலை குறைய வாய்ப்பு

கொச்சி:நடப்பு 2012-13ம் பருவத்தில், நாட்டின் மிளகு உற்பத்தி, 55 ஆயிரம் டன்னாக உயரும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற பருவத்தில், 43 ஆயிரம் டன்னாக இருக்கும் என, இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் தெரிவித்துள்ளது.@கரள மாநிலம்:நறுமணப் பொருட்களின் "அரசன்' என்று வர்ணிக்கப்படும், மிளகின் தாயகம் இந்தியா வாகும். நாட்டின் மொத்த மிளகு உற்பத்தியில், கேரள மாநிலத்தின் பங்களிப்பு, 60 சதவீதம் என்ற அளவில் உள்ளது. மீதமுள்ள பங்களிப்பை, கர்நாடகம் மற்றும் தமிழகம் வழங்குகிறது.

உள்நாட்டில், 2 லட்சம் ஹெக்டேரில், மிளகு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. என்றாலும், சர்வதேச மிளகு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது, இந்தியாவில், இதன் உற்பத்தி அளவு குறைவாகவே உள்ளது.ஒரு காலத்தில், மிளகு உற்பத்தி, ஏற்றுமதியில், முன்னணியில் இருந்த இந்தியா, தற்போது பின்தங்கியுள்ளது.

உலகளவில், வியட்நாம் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் மிளகு உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன.முன் அதிகளவில் மிளகு ஏற்றுமதியில் ஈடுபட்டு வந்த இந்தியா, தற்போது, இறக்குமதியை அதிகம் சார்ந்துள்ளது. உள்நாட்டில், கடந்த 2012ம் ஆண்டில், மிளகு பயன்பாடு, 42,500 டன்னாக இருந்தது. இது, நடப்பு 2013ம் ஆண்டில், 43 ஆயிரம் டன்னாக உயரும் என, நறுமணப் பொருட்கள் வாரியம் மதிப்பீடு செய்துள்ளது.

நறுமணப் பொருட்கள் வாரியம், பழைய மிளகு செடிகளுக்கு பதிலாக, புதிய செடிகளை நடும் வகையில், பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாகவே, உள்நாட்டில் இதன் உற்பத்தி, மீண்டும் உயரத் துவங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.கடந்த 2007-08ம் ஆண்டில், உள்நாட்டில் மிளகு உற்பத்தி, 50 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்தது. இந்த நிலை, கடந்த 2009-10ம் ஆண்டு வரை நீடித்தது.
ஏற்றுமதி:அதன் பிறகு, கடந்த 2010-11ம் ஆண்டில், இதன் உற்பத்தி, 48 ஆயிரம் டன்னாகவும், சென்ற 2011-12ம் ஆண்டில், உற்பத்தி, 43 ஆயிரம் டன்னாகவும் சரிவடைந்தது.

கடந்த 2007-08ம் ஆண்டிற்கு பிறகு, நாட்டின் மிளகு ஏற்றுமதியும் குறையத் துவங்கியது. அதாவது, 2007-08ம் ஆண்டில், மிளகு ஏற்றுமதி, 35 ஆயிரம் டன்னாக இருந்தது. இது,படிப்படியாக குறைந்து, 2010-11ம் ஆண்டில், 18,850 டன்னாக மிகவும் சரிவடைந்து போனது. இருப்பினும், சென்ற 2011-12ம் ஆண்டில், இதன் ஏற்றுமதி, 26,700 டன்னாக அதிகரித்தது.அதேசமயம், 2007-08ம் ஆண்டு முதல், கடந்த 2011-12ம் ஆண்டு வரையிலான, ஐந்தாண்டு காலத்தில், இதன் இறக்குமதி, 13,500 டன்னிலிருந்து, 17,565 டன்னாக உயர்ந்துள்ளது.

வருவா#:கடந்த 2007-08ம் ஆண்டில், மிளகு ஏற்றுமதி மூலம், 5,200 கோடி ரூபாய் வருவாய் கிட்டியது. கடந்த 2011-12ம் ஆண்டில், இதன் ஏற்றுமதி வாயிலான வருவாய், 8,800 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.இதே காலத்தில், இறக்குமதி செய்யப்பட்ட மிளகின் மதிப்பு, 1,900 கோடியிலிருந்து, 5,300 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.உலகளவில், கடந்த 2012ம் ஆண்டில், மிளகு உற்பத்தி, 3.30 லட்சம் டன் என்ற அளவில் இருந்தது. இந்நிலையில், நடப்பு 2013ம் ஆண்டில், வியட்நாமில் இதன் உற்பத்தி குறையும் என்ற மதிப்பீட்டால், ஒட்டு மொத்த அளவில், இதன் உற்பத்தி, 3.20 லட்சம் டன்னாக குறையும் என, சர்வதேச மிளகு உற்பத்தி அமைப்பு தெரிவித்து உள்ளது.விலை நிலவரம்:கடந்த மூன்று ஆண்டுகளில், உள்நாட்டில் மிளகின் விலை, 136.40 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த 2012ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் தேதி, ஒரு டன் மிளகின் விலை, மிகவும் அதிகபட்சமாக, 43,129 ரூபாயாக அதிகரித்திருந்தது. ஆனால், அதன் பிறகு இதன் விலை, படிப்படியாக குறைந்து, ஒரு டன், 37,930 என்ற அளவில் விலை போய்க் கொண்டுள்ளது. குறுகிய கால அடிப்படையில், இதன் விலை, 31 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் குறைய வாய்ப்புள்ளது. இருப்பினும், நீண்ட கால அடிப்படையில், 40,800-41,000 என்ற அளவில் உயரக்கூடும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இந்நிலையில், என்.சி.டீ.இ.எக்ஸ்., முன்பேர சந்தையில், தற்போது, ஒரு டன் மிளகின் விலை, 36,207 என்ற அளவில் உள்ளது. இது, கடந்த ஆண்டு விலையை விட, 6.4 சதவீதம் குறைவாகும்.

## வறட்சியால் தமிழகத்தின் உணவு தானிய உற்பத்தி இலக்கு குறைப்பு

தமிழகத்தில், சென்ற 2012-13ம் நிதியாண்டில், வறட்சி காரணமாக, உணவு தானிய உற்பத்தி Œரிவடைந்தது. இதனால், நடப்பு நிதியாண்டிற்கான தானிய உற்பத்தி இலக்கை, தமிழக அரசு குறைத்துள்ளது.தொழில்நுட்பம்:தமிழக வேளாண்துறை வரலாற்றில், முதல் முறையாக, 2011-12ம் நிதியாண்டில், 101.52 லட்சம் டன் அளவிற்கு அரிசி, சிறு தானியங்கள் உற்பத்தியானது.1,880 கிராமங்களில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தில், வேளாண்மை நடைபெற்றதால், நெல் உற்பத்தி மட்டும், 75 லட்சம் டன் அளவிற்கு இருந்தது.

துல்லிய பண்ணையம், நுண்ணீர் பாசனம் ஆகியவை, சிறு தானியங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு துணை புரிந்தன.பயறு வகை உற்பத்திக்கும், தேவைக்கும் உள்ள இடைவெளியை குறைப்பதற்காக, 1,695 கிராமங்களில், உற்பத்தியை @மம்படுத்த தொழில் நுட்பங்கள் மேற்கொள்ளப்பட்டன.உணவு தானிய உற்பத்தியில் சிறப்பான சாதனை

படைத்ததற்காக, மத்திய அரசு, தமிழகத்திற்கு, "கிரிஷி கர்மான் விருது' வழங்கியது.அரசு பல்வேறு முயற்சிகள் எடுத்தபோதும், 2012-13ம் ஆண்டில் வேளாண் உற்பத்தி குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பாண்டு, ஜனவரி 21ம் தேதி நிலவரப்படி, நெல் உற்பத்தி, 54.84 லட்சம் டன், சிறு தானியங்கள் உற்பத்தி, 25.11 லட்சம் டன், பயறு வகை உற்பத்தி, 3.56 லட்சம் டன் என, மொத்த உணவு தானிய உற்பத்தி, 83.51 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக, பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மேலும் குறைய வாய்ப்புள்ளது.சிறு தானியங்கள் :நடப்பு, 2013-14ம் நிதியாண்டில், நெல் உற்பத்தியை, 78.50 லட்சம் டன் என்ற அளவிலும், சிறு தானியங்கள் உற்பத்தியை, 26.95 லட்சம் டன் என்ற அளவிலும், பயறு வகைகள் உற்பத்தியை, 6.55 லட்சம் டன் என்ற அளவிலும் உற்பத்தி öŒ#ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.வேளாண் துறை கொள்கை விளக்க குறிப்பில், இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளன.மாநிலம் முழுவதும் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக, பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மேலும் குறைய வாய்ப்புள்ளது- நமது நிருபர்

## முன்பேர வர்த்தகம் ரூ.170 லட்சம் கோடியாக சரிவு

புதுடில்லி:கடந்த 2012-13ம் நிதியாண்டில், நாட்டில் உள்ள முன்பேர சந்தைகளில், 170.46 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிற்கு, வர்த்தகம் நடைபெற்றுள்ளது. இது, முந்தைய 2011-12ம் நிதிஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தை விட, 6 சதவீதம் குறைவு என, பார்வர்டு மார்க்கெட்ஸ் கமிஷன் (எப்.எம்.சி.,) தெரிவித்துள்ளது.

உலோகங்கள்:சென்ற நிதியாண்டில், தங்கம், வெள்ளி ஆகிய மதிப்புமிகு உலோகங்கள் மீதான முன்பேர வர்த்தகத்தில், சுணக்க நிலை ஏற்பட்டதால், ஒட்டு மொத்த அளவில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த 2011-12ம் நிதியாண்டில், நாட்டில் உள்ள, 20 முன்பேர சந்தைகளில், வர்த்தகம் நன்கு இருந்ததைஅடுத்து, அதற்கு முந்தைய ஆண்டை விட, வர்த்தகம், 50 சதவீதம் அதிகரித்து, 181.26 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.கடந்த நிதியாண்டில், இதர வேளாண் பொருட்கள் மீதான வர்த்தகமும் சற்றே குறைந்திருந்தது.

கடந்த 2007ம் ஆண்டிலிருந்து, முந்தைய நிதியாண்டு வரையிலான, ஐந்து ஆண்டுகளில், இச்சந்தைகளில் வர்த்தகம் மிகவும் சிறப்பாகவே வளர்ச்சி கண்டு வந்தது. கடந்த 2012-13ம்

நிதியாண்டில், தங்கம், வெள்ளி உள்ளிட்ட மதிப்பு மிகு உலோகங்கள் மீதான வர்த்தகம், 23 சதவீதம் சரிவடைந்து, 101.81 லட்சம் கோடியிலிருந்து, 78.62 லட்சம் கோடி ரூபாயாக குறைந்துள்ளது.

இதே போன்று, இதர வேளாண் பொருட்கள் மீதான வர்த்தகம், 2 சதவீதம் குறைந்து, 21.96 லட்சம் கோடியிலிருந்து, 21.55 லட்சம் கோடி ரூபாயாக குறைந்துள்ளது.எரிŒக்தி:அதேசமயம், சென்ற நிதியாண்டில், எரிசக்தி மீதான வர்த்தகம், 32 சதவீதம் வளர்ச்சி கண்டு, 28.51 லட்சம் கோடியில் இருந்து, 37.68 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.கணக்கீட்டு நிதியாண்டில், தாமிரம் உள்ளிட்ட இதர உலோகங்கள் மீதான வர்த்தகம், 13 சதவீதம் அதிகரித்து, 28.61 லட்சம் கோடியிலிருந்து, 32.60 லட்சம் கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது.தற்போது, உள்நாட்டில் தேசிய அளவில், 5 முன்பேர சந்தைகளும், மண்டல அளவில், 15 முன்பேர சந்தைகளும் செயல்பட்டு வருகின்றன.

## தனியா விளைச்சல் பாதிப்பு:தமிழகத்தில் விலை கிடுகிடு...

சேலம்:கடும் வறட்சியால், தனியா விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு, தனியா வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது.விருதுநகர்:தமிழகத்தில் தேனி, விருதுநகர், மதுரை, தூத்துக்குடி, சேலம், திருநெல்வேலி, தர்மபுரி மாவட்டங்களில் தனியா பயிரிடப்படுகிறது. பருவமழை பொய்த்து விட்டதால், தனியா விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக தேவையை ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பூர்த்தி செய்து வந்தன. கடந்த மாதம் வரை, இந்த மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு, தினம் தோறும், 10 லாரிகளில் தனியா கொண்டு வரப்பட்டது. ஆனால், தற்போது தினமும், இரண்டு லாரிகளில் மட்டுமே தனியா கொண்டு வரப்படுகிறது.

வரத்து குறைவால், வியாபாரிகள், தனியாவை பதுக்கத் துவங்கி விட்டனர்.தனியா வரத்து குறைந்து விட்டதால், விலை, நேற்று ஒரே நாளில் குவிண்டாலுக்கு, 1,500 ரூபாய் வரையிலும், கிலோவுக்கு, 17 ரூபாய் வரையிலும் உயர்ந்துள்ளது.மொத்த விலை:கடந்த வாரம் வரை, மொத்த விலையில் குவிண்டால், 8,700 ரூபாய்க்கு விற்ற தனியா, நேற்று, 10,200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. சில்லரை விலையில், 88 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ தனியா, தற்போது, 105 ரூபாயாக உயர்ந்து உள்ளது.தனியா விலை அதிகரித்து உள்ளதால், அதை மூலப்பொருளாக

கொண்டு தயார் செய்யப்படும், ரெடிமேட் மசாலா பொருட்களின் விலையும் உயரக் கூடும் என, இத்துறையைச் சேர்ந்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தென்காசி பகுதியில் தென்னை ஓலை விற்பனை அமோகமாகம்

தென்காசி:தென்காசி பகுதியில் தென்னை ஓலை விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. தென்காசி பகுதியில் நெல், வாழை, விவசாயத்திற்கு அடுத்தபடியாக தென்னை விவசாயம் சிறப்பாக நடந்து வருகிறது.

தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் அனைத்து பொருட்களும் வீடுகளில் அன்றாடம் பயன்படுத்தும் பொருளாகிவிட்டது. தென்னை ஓலையிலிருந்து பிரித்து எடுக்கப்படும் குச்சிகள் வீட்டை பெருக்கவும், துடைப்பத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் உறித்து எடுத்த பின்பு கிடைக்கும் மட்டைகள் தரம் வாரியாக பிரிக்கப்பட்டு பிரஸ், கயிறு, மெத்தை போன்றவைகள் தயாரிக்கப்படுகிறது. இதன் நுகர்வோர் விவசாய நிலங்களில் தண்ணீரை சேமிக்கவும், சிக்கனமாக பயன்படுத்தவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பங்குனி - சித்திரை கோடை என்பதால் 100 டிகிரி வெப்பத்தையும் கடந்து வெயில் சதமடித்து வருவதால் வீட்டின் மேற்கூரைகள் ஓடு, ஆஸ்பெட்டாஷ் சிமிண்ட் சீட், சென்ட்ரிங் போட்ட கான்கிரீட் வீடுகளிலும் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் ஓலைகள் பின்னப்பட்டு மேற்கூரைகளின் மீது பொருத்தி வருவதால் வெப்பத்தின் தாக்கம் குறைந்து இயற்கை எழிலுடன் கூடிய சீதோஷ்ண நிலை காணப்படுவதால் அனைத்து தரப்பு பொதுமக்களும் தென்னை ஓலைகளை ஆர்வமுடன் வாங்கிச் சென்று மாடியில் குடில் அமைத்தும் மேற்கூரைகள் மீது ஆர்வத்துடன் பொருத்தி வருகின்றனர்.

தென்காசி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தென்னை ஓலைகளுக்கு (கிடுகு) விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. ஒரு (கிடுகு) ஓலையின் விலை 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுகிறது.

## பரிசோதனை விதைகளை வாங்கி பயன்படுத்தினால் அதிக மகசூல்: வேளாண்மை அதிகாரி யோசனை

தஞ்சாவூர்: தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு தஞ்சையை தலைமையிடமாகக் கொண்டு, விதை பரிசோதனை அலுவலகம் காட்டுத்தோட்டம் வளாகத்தில் இயங்கி வருகிறது. இங்கு, விதை பரிசோதனை அலுவலராக, வித்யா பொறுப்பேற்று கொண்டு, விதை பரிசோதனை

மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, வேளாண்மை அலுவலர்கள் நளினி, திலகவதி உள்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.

தொடர்ந்து, விதை பரிசோதனை அலுவலர் வித்யா கூறியதாவது:

தமிழகத்தில் கோவையை தலைமையிடமாக கொண்டு, விதைச்சான்று மற்றும் அங்கக சான்று துறை இயங்குகிறது. இதன்கீழ் தஞ்சையில் இயங்கும் விதை பரிசோதனை மையம் செயல்படுகிறது. இங்கு, விதைகளை பரிசோதனைக்கு உட்படுத்தி, முடிவுகள் விவசாயிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

விதை மாதிரிகளை பெற்று, தரமான விதைகளை கண்டறிந்து விதை சான்றளிப்பு பிரிவில் சான்று வழங்கப்படும். குறிப்பாக, முளைப்புத்திறன், புறந்தூய்மை, ஈரத்தன்மை, பிறரக கலப்பு விதைகள், களை விதைகள் ஆகியவை பரிசோதித்துல முடிவு அறிவிக்கப்படும்.

இத்தகைய விதைகளை பயன்படுத்தினால், அதிக மகசூல் பெற்று விவசாயிகள் லாபம் பெற முடியும்; மேலும் நஷ்டத்தை தவிர்க்கலாம்.

இதன்படி, 30 ரூபாய் செலுத்தி, விதை பரிசோதனையை விவசாயிகள் மேற்கொண்டு பயன்பெற வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## வேதையில் 13 விவசாயிகள் குடும்பத்துக்கு நிவாரணம்

வேதாரண்யம்: வேதையில், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 13 விவசாயிகள் குடும்பத்துக்கு தலா ஒரு லட்சத்து, 2,500 ரூபாய் நிவாரணத்தை எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார்.

நாகை மாவட்டம், வேதாரண்யம் தாலுக்காவை சேர்ந்த பல்வேறு விபத்துக்களில் பாதித்து, இறந்த 13 குடும்பத்தினருக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தில் தலா ஒரு லட்சத்து, 2,500 ரூபாய் வழங்கும் நிகழ்ச்சி, தாலுக்கா அலுவலகத்தில் நடந்தது. இதில், தாசில்தார் புண்ணியகோடி தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், பல்வேறு விபத்துகளில் உயிரிழந்த 13 பேர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சத்து, 2,500 ரூபாயை, உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார். நகராட்சி தலைவர் மலர்க்கொடி, தேத்தாக்குடி வடக்கு பஞ்., தலைவர் கிரிதரன், நாகை மாவட்ட அண்ணா தொழிற்சங்க டாஸ்மாக் இணை செயலாளர் முருகானந்தம், வக்கீல் நமச்சிவாயம் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தர்பூசணி கொள்முதல் விலை அதிகரிப்பால் பாதிப்பு

ஆண்டிபட்டி:தர்பூசணி பழத்திற்கான கொள்முதல் விலை அதிகரித்ததால், சீசன் வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர். கோடையின் வெப்பத்தை தணிக்க,பலரும் தர்பூசணி பழங்களை ருசிப்பர். மார்ச்,ஏப்ரல், மே மாதங்கள் தர்பூசணி பழங்களுக்கான சீசன். தமிழகம், புதுச்சேரி எல்லைப்பகுதி, செங்கற்பட்டு, கடலூர் மாவட்டத்தின் கடற்கரையை ஒட்டி உள்ள பகுதியில், அதிகளவு தர்பூசணி சாகுபடியாகிறது. இப்பகுதியில் விளையும் தர்பூசணி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் மொத்த வியாபாரிகள் மூலம் விற்பனைக்கு அனுப்பப்படும். தர்பூசணி பழங்களை மொத்த வியாபாரிகள் டன் கணக்கில் அனுப்புகின்றனர். இந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சி, விளைச்சல் பாதிப்பு, கூடுதல் தேவையால் தர்பூசணி விலை உயர்ந்துள்ளது. ஆண்டிபட்டி பகுதியைச்சேர்ந்த வியாபாரி நாகராஜ் கூறியதாவது: தேனி மாவட்டத்திற்கு தினமும் 20 முதல் 30 டன் வரை, தர்பூசணி வரத்து உள்ளது. கடந்த ஆண்டு மொத்த விற்பனையில், கிலோ 5 முதல் 7 ரூபாய் வரை இருந்தது. இந்த ஆண்டு விளைச்சல் குறைவால், கிலோ 10 முதல் 12 வரை விற்கப்படுகிறது. போக்குவரத்து செலவு இவற்றை கணக்கிட்டால், சில்லரை விலையில் கிலோ 20 ரூபாய் வரை விற்க வேண்டி உள்ளது,என்றார்.

## கரும்பு அறுவடை சீஸன் நிறைவு வெல்லம் ரூ.350க்கு விற்பனை

கோபிசெட்டிபாளையம்: கரும்பு அறுவடை சீஸன் நிறைவு, உற்பத்தி குறைவு காரணமாக வெல்லம் விலை மூட்டை, 300 முதல், 350 ரூபாய் வரை அதிகரித்ததால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் ஆகிய பாசன பகுதியில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. பதிவு செய்த கரும்பை தவிர, மற்ற கரும்புகளை, நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம், உருண்டை வெல்ல உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. கோபி சுற்று வட்டாரத்தில், அய்யம்பாளையம், ஒத்தகுதிரை, கவுந்தப்பாடி, முள்ளாம்பரப்பு, அவல்பூந்துறை, ஆப்பக்கூடல், நாதிபாளையம், நாகதேவம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், நாட்டு சர்க்கரை, உருண்டை வெல்லம் மற்றும் அச்சு வெல்லம் உற்பத்தி ஆலைகள் அதிகளவில் உள்ளது.

பருவமழை தவறியதால் கரும்பு உற்பத்தி குறைவாக காணப்படுகிறது. கிணற்று பாசன விவசாயிகள் மட்டுமே கரும்பு பயிரிட்டுள்ளதால், வெல்ல உற்பத்திக்கு தேவையான கரும்பு உள்ளது. பல பகுதிகளில் கரும்பு அறுவடை சீஸன் நிறைவடைந்ததால், உற்பத்திக்கு தேவையான கரும்பு கிடைக்கவில்லை. ஒரு டன், 2,200 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட கரும்பு, தற்போது, 2,700 முதல், 2,900 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

உற்பத்தி செய்யப்படும் வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை, கவுந்தப்பாடி மற்றும் சித்தோடு வெல்ல மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. வெல்ல மார்க்கெட்டுக்கு, தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற வடமாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் அதிகளவில் வாங்கி சென்றனர். நடப்பாண்டு கர்நாடகா, ஆந்திரா, மாண்டியா, உத்தரபிரதேசம், மகராஷ்டிரா உள்ளிட்ட வடமாநிலங்களில் வெல்லம் உற்பத்தி அதிகளவில் உள்ளது.

வெல்லம் உற்பத்தி குறைவு காரணமாக உருண்டை வெல்லம், அச்சு வெல்லம் மூட்டைக்கு, 300 ரூபாய் வரையும், நாட்டு சர்க்கரை மூட்டைக்கு, 200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

நாதிபாளையம் பகுதியை சேர்ந்த வெல்ல உற்பத்தியாளர்கள் கூறியதாவது:

வெல்ல மார்க்கெட்டுக்கு, 40 ஆயிரம் உருண்டை வெல்லம் மூடை வரத்தான இடத்தில், எட்டாயிரம் மூடையும், 20 ஆயிரம் மூடை அச்சு வெல்லம் வரத்தான இடத்தில், 5,000 மூடையாகவும் குறைந்துள்ளது. நாட்டு சர்க்கரை, 50 ஆயிரம் மூடை தொடர்ந்து வரத்தாகிறது. உற்பத்தி குறைவால், வெல்லம் விலை உயர்ந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, 30 கிலோ மூடை அச்சு வெல்லம், 840 முதல், 1,100 வரை இருந்தது. தற்போது, 1,300 முதல், 1,400 ரூபாயாக உயர்ந்துள்ளது. 810 முதல், 960 வரை இருந்த உருண்டை வெல்லம், தற்போது, 1,100 முதல், 1,200 ரூபாய் விற்பனையாகிறது.

நாட்டு சர்க்கரை, 60 கிலோ மூட்டை, 1,450 முதல் 1,620 ரூபாயில் இருந்து, 1,700 முதல் 1,950 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. சென்ற ஒரு மாதத்தில் நாட்டு சர்க்கரை, 60 மூடைக்கு, 300 முதல், 350 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஈரோட்டுக்கு ரயில் மூலம் 2,000 டன் நெல் வருகை

ஈரோடு: ஈரோட்டுக்கு, மயிலாடுதுறையில் இருந்து, 2,000 டன் நெல், கோதுமை மூடை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு வந்துள்ளது.

ஈரோடு, சென்னிமலை ரயில்வே குட்ஷெட்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு தேவையான அரிசி, கோதுமை மட்டுமின்றி, வேளாண் பொருட்கள், உரங்கள், கட்டுமான பொருட்கள் ஆகிய சரக்கு பரிமாற்றங்கள் நடந்து வருகிறது.

ரயில்வே குட்செட்டில் இருந்து, லாரிகள் மூலம் பல்வேறு இடங்களுக்கு பொருட்கள் அனுப்பப்படுகிறது. நேற்று காலை, மயிலாடுதுறையில் இருந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு, 2,000 டன் நெல் மூடையும், இந்திய உணவு கழகத்துக்கு, கோதுமையும் வந்து இறங்கியது.

குட்ஷெட்டில் இருந்து, 20க்கும் மேற்பட்ட லாரிகளில், பெருந்துறை ரோட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு சொந்தமான காலி இடத்தில் பாதுகாப்பாக வைக்கும் பணியில், ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு, மயிலாடுதுறையில் இருந்து, சரக்கு ரயில் மூலம், 40 பெட்டிகளில், நெல் வந்தது.

அதேபோல், இந்திய உணவுக் கழகத்துக்கு (எஃப்.சி.ஐ.,) கோதுமை வந்துள்ளது. லாரிகள் மூலம், பெருந்துறை ரோட்டில் உள்ள காலி மைதானத்தில், நெல் பாதுகாப்பாக வைக்கப்பட உள்ளது. சில தினங்கள் கழித்து, அறவைக்கு அனுப்பப்படும், என்றனர்.

## ஆரஞ்சு உற்பத்தி பாதிப்பு: விலை உயர்வு

ஈரோடு: சரியான பருவமழை, சீரான பனிப்பொழிவு இல்லாததால், ஆரஞ்சு உற்பத்தி கடுமையாக பாதித்துள்ளது. கோடையில் தேவை அதிகரித்துள்ளதால், விலை கிலோவுக்கு, 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

ராஜஸ்தான், மகராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் அதிகளவு ஆரஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் உற்பத்தியாகும் பழங்களின் தரம் மற்றும் சுவை குறைந்து காணப்படுவதால், வெளிமாநில பழங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சென்றாண்டு முறையான பருவமழை பெய்யாததால், வட மாநிலங்களில், ஆரஞ்சு உற்பத்தி கணிசமாக குறைந்து விட்டது. மேலும், கடும் பனிப்பொழிவால், ஆரஞ்சு உற்பத்தி பாதித்து, பழத்தின் அளவு குறைந்து, அதிகமாக வரத்தாகின்றன.

தற்போது, கோடை வெயிலின் தாக்கம் உச்சநிலை அடைந்து வருவதால், மக்கள் நீர் ஆதாரமுள்ள பழங்கள் அதிகமாக வாங்கி செல்கின்றனர். ஆரஞ்சு பழத்தில் அதிக நீர் சத்தும், விட்டமின் "சி' தன்மை உள்ளதால், விற்பனை அதிகரித்துள்ளன. இதனால், கிலோவுக்கு, 20 ரூபாய் அதிகரித்து, 60 முதல், 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

ஈரோடு ஆரஞ்சு பழம் மண்டி உரிமையாளர் சேகர் கூறியதாவது:

கோடை காலங்களில் கர்நாடகா, ஆந்திரா, மகராஷ்டிரா, ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதியில் இருந்து ஈரோடு பழ மண்டிக்கு அதிகளவு வரத்தாகும். வாரத்துக்கு, மூன்று லோடு வரை வரத்தாகிறது. அதை மாநரில் உள்ள பழக்கடைகள், சில்லரை வியாபாரிகளுக்கு பிரித்து அனுப்பப்படுகிறது. தவிர, முக்கிய நகர் பகுதியில் தள்ளுவண்டி மூலம் பழம் விற்பனை செய்யும் வியாபாரிகளும் வந்து வாங்கி செல்கின்றனர்.

தற்போது வரத்தாகும் ஆரஞ்சு பழத்தின் சைய்ஸ் குறைந்து, சுருகி காணப்படுகிறது. எனினும், கோடை வெயில் காரணமாக தேவை அதிகரித்துள்ளன.

கடந்த மாதம் ஆரஞ்சு கிலோ, 30 முதல், 40 ரூபாய்க்கு விற்றது, 20 ரூபாய் அதிகரித்து, 60 முதல், 70 ரூபாய்க்கு பழம் தரத்தின் அடிப்படையில் விற்கப்படுகிறது. மே மாதம் கோடை வெயில் உச்சமடைவதால், மேலும் விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, என்றார்.

## ஊட்டியில் உழவர் சந்தைக்கு கூடுது மவுசு : காய்கறி விலையேற்றத்தால் மாற்றம்

ஊட்டி : மார்க்கெட்டில் காய்கறிகளின் விலையேற்றத்தால், ஊட்டி உழவர் சந்தைக்கு மவுசு கூடியுள்ளது.

ஊட்டியை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் உருளைக் கிழங்கு, முட்டை கோஸ், பீட்ரூட், கேரட், பீன்ஸ் உட்பட பலவகை காய்கறிகள் பயிரிடப்படுகின்றன.

கடந்த காலங்களில், உள்ளூரில் விளையும் காய்கறிகளின் விலை, ஓரளவு குறைவாக இருந்து வந்தது. மாறாக, விவசாய தொழிலில் ஆட் பற்றாக்குறை, இடுபொருள் விலை உயர்வு, போக்குவரத்து கூலி உயர்வு, மழையின்மை உட்பட பல காரணங்களால், மலை காய்கறிகளின் விலையும் "மலைக்க' வைக்கும் வகையில் உயர்ந்துள்ளது.

இந்நிலையில், காய்கறி விலையேற்றம் கையை கடிப்பதால், பொதுமக்களின் கவனம் ஊட்டி உழவர் சந்தை பக்கம் திரும்பியுள்ளது. கடந்த காலங்களில் உழவர் சந்தைக்கு வராத கிராமப்புற மக்கள் பலர், தற்போது உழவர் சந்தையை நாடி வரத்துவங்கியுள்ளனர், என உழவர் சந்தை அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளை ஒப்பிடுகையில், உழவர் சந்தையில் காய்கறி விற்பனை செய்யும் உழவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது; காய்கறி விற்பனையும் களைகட்டுகிறது.

இருவேறு விலை

ஊட்டி மார்கெட் கடைகளில் காய்கறி விலையுடன், உழவர் சந்தை விலையை ஒப்பிடுகையில், பெருமளவு வித்தியாசம் இருப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர். மார்கெட்டில் உள்ள பல காய்கறி கடைகளில், உழவர் சந்தை இயங்கும் காலை நேரங்களில் ஒரு விலையும், மதியத்திற்கு மேல் அதற்கு சற்று கூடுதல் விலையிலும் காய்கறிகள் விற்கப்படுகிறது, என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. எனவே, மார்க்கெட் வியாபாரிகள், காய்கறி விலைப்பட்டியலை கடை முன் தொங்க விட வேண்டும், என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது.

## மாம்பழம் சீசன் துவங்கியது: கேரள மாம்பழத்துக்கு மவுசு

முப்புரம் : விழுப்புரம் மார்க்கெட் டில் மாம்பழ சீசன் துவங்கியுள்ளதையொட்டி கேரள மாம்பழங்கள் விற்பனைக்கு குவிந்துள்ளன.

மாம்பழத்திற்கான சீசன் தற்போது துவங்கியுள்ளது. மூன்று மாதங்கள் வரை மட்டுமே கிடைத்து, தனி சுவை தரும் மாம்பழத்திற்கான இந்தாண்டு சீசன் தற்போது துவங்கியுள்ளது.

முதல் கட்டமாக உயர் ரகத்தைச் சேர்ந்த பங்கனப்பள்ளி, செந்தூரா, காலாடி, இனாமஸ், காதர் ரக மாம்பழங்கள் வரத்து துவங்கியுள்ளது. கேரள மாநில வரவான இந்த ரகங்கள், கோவையிலிருந்து வரவழைக்கப்பட்டு, தற்போது விழுப்புரத்தில் விற்பனைக்கு குவிந்துள்ளது. செந்தூரா கிலோ 30 ரூபாய்க்கும், பங்கனப்பள்ளி 50, காலாடி 60, இனாமஸ் 70, காதர் 60 ரூபாய்க்கும்

விற்கப்படுகிறது.
இதனையடுத்து, தமிழக வரவான அனைத்து ரக மாம்பழங்களும் வந்துள்ளது. தர்மபுரி, சேலம், கோபால்பட்டி, கிருஷ்ணகிரியிலிருந்து மாம்பழ வரத்து துவங்கியுள்ளதால், தரமான மாம்பழங்கள் குறைந்த விலையில் கிடைக்க உள்ளதாக வியா பாரிகள் தெரிவித்தனர்.
மாம்பழ வரத்து துவங்கியுள்ளதால், பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

## பச்சை மிளகாய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் : பிடாகம் பகுதியில் விளைச்சல் அமோகம்

விழுப்புரம் : விழுப்புரம் அடுத்த பிடாகம் கிராமத்தில் அதிகளவில் விவசா யிகள் தற்போது பச்சை மிளகாய்(ஹைபிரிடு) சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
விழுப்புரம் அடுத்த பிடாகம், அத்தியூர் திருவாதி உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் வெண்டை, கத்திரிக்காய், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர்.
இப்பகுதி விவசாயிகள் தற்போது தங்களின் நிலத்தில் யூஎஸ் 344 ரகத்தை சேர்ந்த பச்சை மிளகாய் (ஹைபிரிட்) சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
இந்த ரக பச்சை மிளகாய் விதையை பண்ருட்டியிலிருந்து விவசாயிகள் வாங்கி வருகின்றனர்.
இந்த விதைகளை கொண்டு பிடாகம், அத்தியூர் திருவாதி கிராம விவசாயிகள் அப்பகுதியில் 10 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்துள்ளனர்.
இந்த சாகுபடி செய்ய அரசு தோட்டக்கலை துறை மூலம் 45 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. அரசு மானியம் மற்றும் சொட்டு நீர் பாசனம் மூலம் பச்சை மிள காய் சாகுபடிக்கு மொத்தம் 60 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவாகிறது.
ஆறு மாதங்களில் அறுவடைக்கும் தயாராகும் பச்சை மிளகாயில் விவசாயிகள் ஒரு டன்னிற்கு 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் ஈட்டுகின்றனர். யூஎஸ் 344 ரக பச்சை மிளகாய்(ஹைபிரிடு) தற்போது மார்க்கெட்டில் கிலோ 8 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது.
ஒரு ஏக்கருக்கு 50 டன் வரை அறுவடை செய்யப்படும் பச்சை மிளகாய் (ஹைபிரிடு) சாகுபடியில் பிடாகம், அத்தியூர் திருவாதி விவசாயிகள் தற்போது அரசு மானியத்தோடு அதிக லாபத்தை ஈட்டி வருகின்றனர்.

## 704 பருத்தி மூட்டைகள் ரூ.21 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 704 மூட்டைகள், 21 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.
ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்.,) சார்பில், கவுண்டம்பாளையம் குடோனில், வாரம் தோறும் திங்கள் கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது.
அதன்படி, நேற்று நடந்த ஏலத்தில், நாமக்கல், சேலம், கொங்கணாபுரம், திருச்செங்கோடு,

அவிநாசி, அன்னூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், ஆத்தூர், தொடாவூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்றனர்.

பட்டணம், முத்துகாளிப்பட்டி, கைலாசம்பாளையம், வேலம்பாளையம், கதிராநல்லூர், குருசாமிபாளையம், சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, ஜேடர்பாளையம், பெரம்பலூர், ஏர்வாடி, புளியங்குறிச்சி, துறையூர், மணிவிழுந்தான்காலனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 100க்கும் அதிகமான விவசாயிகள், அறுவடை செய்த பருத்தி மூட்டைகளை, ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.அதில், ஆர்.சி.ஹெச்., பருத்தி மூட்டைகள், 399, டி.சி.ஹெச்., 305 என, மொத்தம், 704 மூட்டைகள், ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டது. டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 5,280, குறைந்த பட்சம், 4,940 ரூபாய்க்கும், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,899, குறைந்த பட்சம், 4,670 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 21 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## கொளுத்தும் கோடை வெயில் இளநீர், லெமன் ஜூஸ் விலை உயர்வு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கொளுத்தும் கோடை வெயில் காரணமாக முதல் தரமான இளநீர் மற்றும் லெமன் ஜூஸ் விலை உயர்ந்துள்ளது.வெப்ப மண்டல பகுதியான தர்மபுரி மாவட்த்தில், இந்தாண்டு, எப்போதும் இல்லாத அளவுக்கு கோடை வெயில் வாட்டி எடுத்து வருகிறது. கடந்த, 15 நாட்களுக்கு மேலாக கோடை வெயில், 100 டிகிரிக்கு மேல் வாட்டி எடுத்து வருகிறது. வெயில் அதிகரிப்பு காரணமாக மக்கள் புழுக்கத்தில் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பகல் நேரங்களில் வெப்ப காற்று வீசி வருவதால், சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து, சாலைகள் வெறிச்சோடி காணப்படுகிறது. வாகனங்களில் செல்வோரும் வெப்ப காற்றுக்கு பயந்து வாகனங்களில் செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

வெயில் தாக்கம் அதிகம் இருப்பதால், கடந்த காலங்களில் காலை, 9 மணி வரையில் வாக்கிங் செல்வோர் கூட தற்போது, அதிகாலை, 4 மணிக்கு எல்லாம் வாக்கிங் செல்ல துவங்கியிருப்பதோடு, காலை, 7 மணிக்குள் வாக்கிங் முடித்து கொண்டு தங்களின் மற்ற பல்வேறு பணிகளை கவனிக்க துவங்கியுள்ளனர்.வெயில் வாட்டத்தால், பழங்கள் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. அதே போல் இளநீர் மற்றும் லெமன் ஜூஸ் விற்பனையும் களை காட்ட துவங்கியுள்ளது. இளநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் முதல் தரமான இளநீரை வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.முதல் தரமான இளநீர் கடந்த காலங்களில் சில்லறை விற்பனைக்கு, 10 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. தற்போது, 15 ரூபாய்க்கு விற்பனை செய்வதோடு, காலை நேரத்துடன் முதல் தர இளநீர்கள் விற்ற தீர்ந்து விடுகிறது.

தோசை பதம் உள்ள இளநீர், 10 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இதே போல்

எலுமிச்சம் பழங்ளின் விலையும் சற்று உயர்ந்துள்ளது. இதனால், கடந்த நாட்களில் ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட லெமன் ஜூஸ் விலை ஆறு ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. விலை உயர்ந்த போதும் பொதுமக்கள் வாட்டும் வெயில் இருந்து தப்ப இது போன்ற பானங்களை விரும்பி வாங்கி பருகி வருகின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**9.04.2013 A.M**

---

**உபாசி சங்கம் சார்பில் புதிய தேயிலை ஏல மையம் 15ம் தேதி தொடங்க திட்டம்**



குன்னூர் : தென்னிந்தியாவில் மொத்தம் 8 தேயிலை ஏல மையங்கள் உள்ளன. இந்நிலையில், நாடு முழுவதும் ஒரே மாதிரியான ஏலத்தை நடத்த தேயிலை வாரியம் சார்பில் பான்இந்தியா திட்டம், வரும் மே மாதம் முதல் அமல்படுத்தப்பட உள்ளது. கடந்த மாதம் குன்னூரில் சி.டி.டி.ஏ.தேயிலை மைய பொன் விழாவையொட்டியும், நீலகிரி தோட்ட அதிபர்கள் சங்கம் சார்பிலும் 2 ஏலங்கள் நடந்தன.

அப்போது, தென்னிந்திய தோட்ட அதிபர் சங்கம் சார்பில் புதிதாக ஏல மையம் துவங்க திட்டமிடப்பட்டது. யுசெல் எனும் பெயரில் இந்த ஏல மையம் வரும் 15ம் தேதி முதல் செயல்பட உள்ளது. தென்னிந்தியாவில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் தேயிலை தோட்டம் உள்ளது. இதில் 60 சதவீத தேயிலை தோட்ட அதிபர்கள் சங்க உறுப்பினராக உள்ளனர்.

இதுவரை வெளிநாடுகளுக்கு நேரடியாகவும், ஏல மையம் மூலமாகவும் தேயிலை விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில், தென்னிந்திய தேயிலை தோட்ட அதிபர் சங்கம்(உபாசி) மூலம் ஏலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக நேற்று முதல் வரும் 13ம் தேதி வரை உபாசி மாதிரி தேயிலை ஏலம் நடைபெறுகிறது. வரும் 15ம் தேதி ஏலம் துவங்குகிறது. துவக்க விழாவுக்கு, இந்திய தேயிலை வாரிய தலைவர் பானு, துணை தலைவர் கே.சி.பேபி, தென்னிநந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவானன், உபாசி சங்க பொதுசெயலாளர் உல்லாஷ்மேனன் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

## நாமக்கல்லில் முட்டை விலை 300 காசாக நிர்ணயம்



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு விலை நிர்ணயம் குறித்து ஆலோசித்தனர். இந்த கூட்டத்தில், முட்டை விலையில் 15 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 285 காசில் இருந்து 300 காசாக உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 3 வாரமாக முட்டை விலை குறைந்ததால் விற்பனை சற்று அதிகரித்துள்ளது. இதனால் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கீழ்பவானி வாய்க்காலில் நாளை திறப்பு கடைக்கோடி வரை தண்ணீர் செல்ல விவசாயிகள் ஒத்துழைக்க கோரிக்கை

ஈரோடு, : கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கத்தின் ஆலோசனை கூட்டம் ஈரோட்டில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் நல்லசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் கீழ்பவானி பாசன பகுதியில் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டு வருகிறது. வரும் 10ம் தேதி கீழ்பவானி பாசன பகுதிக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளது. 11 நாட்களுக்கு வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் அணையில் இருந்து திறக்கப்படவுள்ளதால் கடைக்கோடி வரை தண்ணீர் செல்ல வேண்டியது உள்ளது. இதனால் விவசாயிகள் பொதுப்பணித்துறைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும், காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு உடனடியாக ஏற்படுத்தி காவிரி இறுதி தீர்ப்பை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும்.

கீழ்பவானி பாசன தலைமை கால்வாயின் நீளம் 124 மைல். இதிலிருந்து கூகலூர், பவானி, ஊஞ்சலூர், சென்னசமுத்திரம் ஆகிய பகிர்வு கால்வாய்களும், கிளைவாய்க்கால்களும் உள்ளது. இந்த வாய்க்கால் பகுதியில் மண்ணரிப்பை தடுக்கவும், கரைஉடைப்பை போக்கவும், ஆக்கிரமிப்புகளை தடுக்கவும், பனைமரங்களை நட பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் செயலாளர்கள் கோபிநாத், தங்கராசு, திருப்பூர் மாவட்ட செயலாளர்கள் சண்முகம், வெங்கிடுசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கடும் வறட்சியால் விறகுக்கு வெட்டப்படுகிறது தமிழகத்தில் பனைமரங்கள் முற்றிலும் அழியும் ஆபத்து

ஈரோடு, : நடப்பாண்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சியால் தண்ணீர் இல்லாமல் பனை மரங்கள் வெட்டப்படும் அவலம் தமிழகம் முழுவதும் பரவலாக உள்ளது. 50 ஆண்டுக்கு முன்பு தமிழகத்தில் 30 கோடி பனை மரங்கள் இருந்த நிலையில் கடந்த ஆண்டு வெறும் 5 கோடி பனை மரங்கள் மட்டுமே இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவித்தன. சமீபகாலமாக வறட்சியின் தாக்கத்தால் பொலிவிழந்த பனை மரங்களை காப்பாற்ற முடியாமல் செங்கல் சூளைகளுக்கு விறகாக பயன்படுத்தும் அவலம் ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் பரவலாக பனை மரங்கள் அழிந்து வருவதால் தமிழனின் அடையாளமாக கருதப்படும் பனைமரங்கள் இன்னும் சில ஆண்டுகளில் முற்றிலும் அழிந்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இலங்கை போன்ற நாடுகளில் பனை மரங்களை வெட்டினால் ஜாமீனில் வெளியே வர முடியாத குற்றமாக கருதப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் பனை மரங்களை சர்வசாதாரணமாக வெட்டி அழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இயற்கை காடுகளை அழித்து விட்ட நிலையில் பனை மரங்களும் வேகமாக அழிந்து வருவதால் இதை காப்பாற்ற தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி கூறியதாவது:
உலகளவில் 108 நாடுகளில் பனை மரங்கள் உள்ளன. இதில் எந்த ஒரு நாட்டிலும் கள் இறக்குவதற்கோ, பருகுவதற்கோ தடை இல்லை. ஆனால் தமிழகத்தில் மட்டும் கள் இறக்க தடை உள்ளது. கள் இறக்குவதற்கான அனுமதி இருந்த வரையிலும் பனை மரங்களை காப்பாற்ற வேண்டும் என்ற கவலை விவசாயிக்கு இருந்தது. தற்போது குடிக்கவே தண்ணீர் கிடைப்பதில்லை என்கிற போது, பனை மரங்களை காப்பாற்ற நினைத்தாலும் தண்ணீர் கிடைக்காததால் விவசாயியால் பனை மரங்களை காப்பாற்ற முடியாமல் செங்கல் சூளைக்கும், சுண்ணாம்பு காளவாய்க்கும் எரிபொருளாக வெறும் ரூ.50க்கு விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.
முன்பு இனிப்புத்தேவையை பனங்கருப்பட்டி, கற்கண்டு மற்றும் பதநீர் நிரப்பி வந்த போது பனை மரங்களுக்கு நல்ல மரியாதை இருந்தது. ஆலைக்கரும்பு அறிமுகமான பிறகு வெள்ளை சர்க்கரையின் நுகர்வு அதிகரித்து போனதால் பனையின் பயன்பாடு குறைந்து விட்டது. பனைப்பொருட்களின் பயன்பாடு குறைந்து போனதன் விளைவே நாடு முழுவதும் சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க காரணமாகி விட்டது. சீமைக்கருவேல மரங்களின் அதிகரித்ததும் பனை மரங்களின் அழிவுக்கு காரணமாகி விட்டது.
கள், பதனீர், கற்கண்டு, நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு என ஆண்டுதோறும் உணவு கொடுத்து வந்த பனை மரங்களை வெட்டுவதும், அவற்றை தோண்டி எறிவதும் கடுமையான குற்றத்திற்கு ஒப்பானது தான். எனவே பனை மரங்களை அழிவிலிருந்து காப்பாற்ற பனை மரங்களை வெட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இயற்கை ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு. வேகமாக அழிந்து வரும் மரங்களில் பனையும் ஒன்று என்பதை உணர்ந்து பனை மரங்களை காப்பாற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பனை பொருட்களின் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறு நல்லசாமி தெரிவித்தார்.

## மாவட்டத்தில் உழவர் பெருவிழா 365 கிராமங்களில் நடத்த ஏற்பாடு

ஈரோடு, : மாவட்டத்தில் உழவர் பெருவிழா 365 கிராமங்களில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழா வரும் 14ம் துவங்குகிறது.
வேளாண்துறை சார்பில் நடப்பு 2013-14ம் ஆண்டு தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி பிற துறைகளின் ஒத்துழைப்புடன் உழவர் பெரு

விழா நடத்த முடிவு செய்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை 365 வருவாய் கிராமங்களில் நடப்பாண்டில் உழவர் பெருவிழா நடத்த வேளாண்துறை திட்டமிட்டு அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறையினர் கூறியதாவது: வரும் ஏப்ரல் 14ம் தேதி சித்திரை முதல் நாளில் நடப்பாண்டிற்கான உழவர்பெருவிழா தமிழகம் முழுவதும் துவங்குகிறது. மே 20ம் தேதி வரையிலும் நடைபெற உள்ள உழவர் பெருவிழாவில் சிறிய அளவிலான கண்காட்சிகளும், கால்நடை பராமரிப்புத்துறை, கட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலைத்துறை, விதைச்சான்று, வேளாண் ஆராய்ச்சி நிலையம், விதை ஆய்வு, பட்டு வளர்ச்சித்துறை, மீன் வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறையின் அரங்குகளும், இந்த துறைகளில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்ட விளக்கங்கள் தொடர்பாக தகவல்கள் இடம் பெறும். இத்தகவல்களை சேகரித்து கூடுதலாக இத்துறையில் தங்களை ஈடுபடுத்தி கொள்ள விவசாயிகள் முன்வர வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 365 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெற உள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இருப்பினும், இதற்கான நிதி வசதி வேளாண்துறையிடம் உள்ளதால் அந்த நிதியை கொண்டு கடந்தாண்டு போலவே முதலில் செலவிட்டு பிறகு அரசிடம் இருந்து பெற்று கொள்ளப்படும்.

இவ்வாறு வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கோடை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி?

பெரியகுளம், : கோடை சாகுபடியில் நெல் பயிருக்கு ஊக்கம் தரக்கூடிய அசோலாவை பயன்படுத்தினால் அதிக அளவில் மகசூல் பெறலாம் என வேளாண் அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில், ‘அசோலா நீர் நிலைகளில் மிதந்து வளரக் கூடியது பெரணி வகையைச் சேர்ந்த தாவரம். இது சிறிய அளவிலான இலைகளையும், துல்லியமான வேர்களையும் கொண்டது. நெல் வயல்களில் வளரக் கூடியது. இந்த அசோலா வளரும் போதும், மக்கிய பின்பும், தாவரத்திற்கு தேவையான தழைச்சத்தை தரும். இதில் 5.30 சதவீதம் தழைச் சத்து, 1.6 சதவீதம் மணிச் சத்து, 5.9 சதவீதம் சாம்பல் சத்து உள்ளது.

இதுதவிர சுண்ணாம்பு, கந்தகம், இரும்பு, மெக்னீசியம் சத்துகளும் உள்ளன. அசோலா உற்பத்தி

செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட வயலை நன்கு உழுது சமன் செய்ய வேண்டும். பின்னர் வயலை ஒரு சென்ட் பாத்திகளாக பிரித்து 4 பகுதிகளும் வரப்பு அமைக்க வேண்டும். எப்பொழுதும் தண்ணீர் 10 செமீ அளவு இருக்க வேண்டும். 10 கிலோ மாட்டு சாணத்தை 20 லிட்டர் தண்ணீரில் கரைத்து பாத்திகளில் தெளிக்க வேண்டும். பின்னர் 8 கிலோ அசோலாவை பாத்திகளில் இட வேண்டும். 100 கிராம் சூப்பர் பாஸ்பேட்டை 3 பங்காக பிரித்து 4 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். 15 நாட்களில் அசோலா தயார் ஆகிவிடும். ஒரு ஏக்கர் வயலுக்கு இட 4 சென்ட் அசோலா போதுமானது. கோடை சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் அசோலாவை ஏக்கருக்கு 200 கிலோ அளவில் ஏழு நாட்களுக்குள் நெல் வயலில் இட வேண்டும். 30 நாட்களில் 3 டன் அளவில் பெருகி வயல் முழுவதும் படர்ந்து விடும். களை எடுக்கும் சமயத்தில் இந்த அசோலாவை மண்ணில் மிதித்து விட வேண்டும். இவ்வாறு செய்வதால் மண்ணில் கரிமத்தன்மை கூடுவதோடு மகசூலும் அதிகரிக்கும். களை வளர்வதும் கட்டுப்படுத்தப்படும்' என தெரிவித்தனர்.

## விவசாயம் பாதிப்பு பாலாற்று மணல் திருட்டை தடுக்க கலெக்டரிடம் மனு

காஞ்சிபுரம், : பாலாற்றில் மணல் திருட்டை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், பாலாற்று படுகை விவசாயிகள் சங்கம் மற்றும் பழவேரி கிராம மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலெக்டர் சித்திரசேனனிடம் அளித்த கோரிக்கை மனு:காஞ்சிபுரம் மாவட் டம் பழவேரி, பழைய சீவரம், புளியம்பாக்கம் பகுதி பாலாற்றில் அனுமதியின்றி மணல் அள்ளப்படுகிறது. இரவு நேரங்களில் தொடர்ச்சியாக லாரி, மாட்டு வண்டிகளில் மணல் திருடப்படுகிறது. பாலாற்று தண்ணீரை நம்பிதான் விவசாயம் செய்து வருகிறோம். அளவுக்கு அதிகமாக மணல் அள்ளுவதால் நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. விவசாயமும் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத் தில் கொண்டு பாலாற் றில் மணல் திருட்டை தடுக்க விரை வில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

## வலங்கைமான் பகுதிகளில் மின்சாரம் இல்லாததால் கருகும் நெற்பயிர்கள்

வலங்கைமான், : வலங்கைமான் தாலுகாவிற்கு உட்பட்ட வருவாய் கிராமங்களில் போதிய மும்முனை மின்சாரம் வழங்கப்படாததால் கோடை சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் கருகும் நிலையில் உள்ளது. எனவே கூடுதல்நேரம் மும்முனை மின்சாரம் வழங்க விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுகாவில் உள்ள ஆதிச்சமங்கலம், ஆலங்குடி, வடக்குப்பட்டம், தெற்குப்பட்டம், சித்தன்வாழூர், சந்திரசேகரபுரம்

உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கோடை சாகுபடியாக நெல் சாகுபடி மற்றும் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். வலங்கைமான் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் 3,000 ஏக்கர் வரை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் சாகுபடி நடவுமுறை மற்றும் டிரம் சீட் முறை, பாய் நாற்றாங்கால் முறை ஆகிய முறைகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி செய்யப்பட்டு 30 நாட்கள் ஆன நிலையில் பயிர்களுக்கு போதிய அளவு தண்ணீர் பாய்ச்சுவதற்கு தேவையான மும்முனை மின்சாரம் வழங்கப்படுவதில்லை. முன்னதாக நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தருவதாக அறிவித்த தமிழக அரசு தற்போது நாள் ஒன்றுக்கு மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது.  இதனால் கோடை சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. வலங்கைமானை சேர்ந்த முன்னோடி விவசாயி வைத்திலிங்கம் கூறும்போது, எனது நிலத்தில் 20 ஏக்கரில் இயந்திரம் மூலம் நெல் சாகுபடி செய்துள்ளார். மேலும் 40 ஏக்கருக்கு நடவு செய்வதற்காக விதை விடப்பட்டு 45 நாட்களை தாண்டிய நிலையில் போதிய மின்சாரம் இல்லாததால் தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலையில் கோடை சாகுபடி செய்வது கால தாமதம் ஆகி உள்ளது. 20 ஏக்கரில் இயந்திரத்தின் மூலம் நடவு செய்யப்பட்ட நெற் பயிர்கள் போதிய தண்ணீர் இல்லாததால் கருகத் துவங்கியுள்ளது. எனவே பயிர்களை பாதுகாக்க தினமும் ரூ.1,750 வாடகைக்கு ஜெனரேட்டர் ஏற்பாடு செய்து பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. ஒரு மணி நேரம் ஜெனரேட்டர் இயங்க டீசல் 5 முதல் 6 லிட்டர் வரை செலவாகிறது. மேலும் ஜெனரேட்டரை தொடர்ந்து பயன்படுத்த முடியாது, தற்போது களைகள் அதிகமாக உள்ளதால் அதை கட்டுப்படுத்தி உரம் தெளிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் கூடுதல் மும்முனை மின்சாரம் மூன்று மாதங்களுக்கு தந்தால் மட்டுமே கோடை சாகுபடி பயிர்களை காத்திட முடியும் என்றார்.மேலும் வலங்கைமான் சுற்றுவட்டார பகுதிகளில் இந்த ஆண்டு 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறைந்த நேரமே வரும் மும்முனை மின்சாரத்தால் பருத்தி சாகுபடியும் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. வலங்கைமான் பகுதியில் ஏற்படும் தொடர் மின்வெட்டால் கோடை சாகுபடி பாதிக்கப்படுவதோடு பள்ளி மாணவ, மாணவிகளின் கல்வித் தரமும் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. தற்போது 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக மாலை மற்றும் இரவு நேரங்களில் தடையில்லா மின்சாரம் வழங்க கோரி இருந்தனர். ஆனால் தற்போது நாள் ஒன்றுக்கு பதினைந்து மணி நேரங்களுக்கு மேலாக மின்வெட்டு ஏற்படுகிறது. மேலும் அரசு பொதுத்தேர்வு நடைபெறும் நேரங்களில் பள்ளி மாணவர்கள் தேர்வு எழுத ஏற்ற வகையில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் நேற்றுமுன்தினம் நடந்த தேர்வின்போது தேர்வு மையங்களில் மின் விநியோகம் இல்லை.

இதனால் மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டனர்.எனவே 10ம் வகுப்பு மற்றும் ஏனைய தேர்வுகள் நடைபெறும் நேரங்களில் தடையில்லாத ஒரு முனை மின்சாரமும், கோடை சாகுபடியை காத்திட கூடுதலாக மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென பொது மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தற்போது மின் இருப்பு மற்றும் மின் தேவை குறித்து அரசு தெளிவாக தெரிவிக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**9.04.2013 A.M**

---

## வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட 14 கிராமங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் 4 ஆயிரத்து 500 கால்நடைகள் பயன் பெற்றன

குன்னம்,

பெரம்பலூர் மாவட் டம் வேப்பூர் ஒன்றியத் திற்குட்பட்ட 14கிரா மங் களில் கால்நடைகளுக் கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. இதில் 4 ஆயிரத்து 500 கால்நடைகள் பயன் பெற்றன.

கோமாரி நோய்

கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் பாதிப்புக் குள்ளான இடங்களிலிருந்து வாங்கி வரப்பட்ட கால் நடை கள், சுகாதாரமற்ற கால்நடைவளர்ப்பு மற்றும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடாமல் இருத்தல் போன்ற காரணங்களால் காற்றின் மூலம் பரவும் நோய் கோமாரி நோய்.

நோய் தாக்குதலுக்குள்ளான கால்நடைகள் திடீரென்று தீவ னம் உட்கொள்ளாது அதிக காய்ச்சல் இருக்கும் நாக்கு உதடு மற்றும் கால் குளம்பு களுக்கு இடையில் நீர் கொப் புளங்கள் உருவாகி பின்பு புண் ஏற்படும்.

பொருளாதார இழப்பு

இந்நோய் கண்ட கால் நடையின் பாலை இளம் கன் றுகள் குடித்தால் கன்றுகள் இறக்க நேரிடும். இதனால் பால் உற்பத்தி பாதிக்கப்பட்டு கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு ஏற் படுகிறது. இதனைதடுக்கும் பொருட்டு மாவட்ட கால் நடை மற்றும் பராமரிப்பு துறை இணை இயக்குநர் தங்கராசு மேற் பார்வையில் கோயில் பாளை யம் கால்நடை உதவி மருத்து வர் முருகேசன் தலைமையில் நடந்த கோமாரி நோய் தடுப் பூசி முகாம் நடைபெற்றது. இந்த முகாம் களுக்கு ஊராட்சி மன்ற தலைவர்கள் பெரிய வெண்மணி பச்சையம்மாள், கொளப்பாடி பழனியம்மாள், புதுவேட்டக்குடி மோகன், துங்கபுரம் ராமையன் ஆகி யோர் முன்னிலை வகித்த னர்.

14 கிராமங்களில்

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஒன்றியம் கோவில் பாளையம், தேனூர், கிளியப் பட்டு, புதூர், புதுவேட்டக்குடி, துணிஞ்சபாடி, கொளப்பாடி, பெரியவெண்மணி, சின்ன வெண்மணி, புதுக்குடிசை, காடூர், நல்லரிக்கை, துங்கபுரம், கொத்தவாசல் ஆகிய 14 கிராமங்களில் இந்த முகாம்கள் நடந்தன.

4 ஆயிரத்து 500 கால்நடைகள்

இதில் கால்நடை ஆய் வாளர்கள் மல்லிகா, செல்வி, ஆறுமுகம், துரைராஜ், பன்னீர் செல்வம், ராமச்சந்திரன், ராஜ சேகர், பராமரிப்பு உதவி யாளர்கள் மந்திரிகுமாரி, ஆண் டவர், செல்வவிநாயகம், தேவிகா, ராஜேஸ்வரி, மாரி யாயி, மலர்க்கொடி, சின்னு காளை, ராஜசேகர், வரதராஜ், பழனியாண்டி, பெரியசாமி, பூபதி, கலைச்செல்வி, செல்வ குமார், ரபீக், கோவிந்தராசு, பரமேஸ்வரி ஆகியோர் உள் ளிட்ட 8 தடுப்பூசிகுழுக்களின் மூலம் நடத்தப்பட்ட முகாம் களில் மொத்தம் 4ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப் பட்டது.

## கொட்டரை நீர்த்தேக்க திட்டத்திற்காக விவசாயிகளிடம் சிவசங்கர் எம்.எல்.ஏ. கருத்து கேட்பு

பாடாலூர்,

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகாவில் கொட்டரை – ஆதனூர் இடையே அறிவிக்கப் பட்டுள்ள நீர்த்தேக்க திட்டம் குறித்து கொட் டரை, ஆதனூர், குரும் பாபாளையம் கிராம விவசாயிகளிடம் சிவ சங்கர் எம்.எல்.ஏ. நேரில் சந்தித்து கருத்துகளை கேட்டறிந்தார்.

அணை கட்ட கோரிக்கை

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகாவில் உள்ள 20–க்கும் மேற்பட்ட கிராமங் களின் வழியாக செல்லும் பல் வேறு காட்டாறுகள் ஒன்றாக கலக்கும் மருதையாற்றில் செல்லும் நீர் எவ்வித பயன் பாடும் இல்லாமல் கடலுக்கு சென்று கலந்து வருகிறது.

அதனால் அந்த மருதை யாற்றில் குறுக்கே அணை கட்ட வேண்டும் அந்தப் பகு தியைச் சேர்ந்த விவசாயிகள் பல ஆண்டுகளாக தமிழக அரசுக்கு கோரிககை விடுத்து வந்தனர்.

ரூ.108 கோடி

அதன்பேரில் ஆலத்தூர் தாலுகா கொட்டரை – ஆதனூர் இடையே சுமார் 465 ஏக்கர் பரப்பளவில் மருதை யாற்று நீரை தேக்கும் வகையில் நீர்த்தேக்கத் திட்டம் ரூ,108 கோடியில் கட்டப்படுவதாக தமிழக முதல்வர் கடந்த சில தினங்களுக்கு முன்பு அறிவித்தார்.

அந்த திட்டத்தின் நீர்த் தேக்கம் அமைய உள்ள பகுதி யான குருமபாபாளையம், கொட்டரை, ஆதனூர் கிரா மங்களில் விவசாய நிலங்களை அரசு கையகப் படுத்தவுள் ளதாக தெரிய வந்ததால் அந்த பகுதியைச் சேர்ந்த விவ சாயி கள் கவலையடைந்துள் ளனர்.

கருத்து கேட்டார்

இது குறித்து சிவசங்கர், எம்.எல்.ஏ குரும்பாபாளையம், கொட்டரை, ஆதனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவ சாயிகள், பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களிடம் கருத்துகளை கேட்டறிந்தார். அப்போது, அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் இந்த திட்டத்திற்காக நிலங்களை கையகப்படுத்தும் போது தங்கள் விவசாய நிலங்கள் முழுமையாக பாதிக்கப் படுவ தால் தங்கள் வாழ்வா தாரங் கள் முற்றிலும் பாதிக்கப் படுகி றது. மேலும், தங்கள் எதிர் காலம் முற்றிலுமாக பாதிக்கப் படுகிறது.

மேலும், வருங்காலங்களில் தங்களுடைய குழந்தைகள் வாழ்க்கையும் பாதிக்கப்படும். இந்த திட்டத்தினால் வீடு களையும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் முற்றிலும் நிலங்கள் பாதிக்கப்படும் விவசாயி களுக்கு அரசு வேலை வழங்க அரசு முன்வர வேண்டும். வீடு களை இழந்தவர்களுக்கு வீடு கள் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அரசு சார்பில்

விவசாயிகள், பொது மக்களி டம் கருத்துகளை கேட்டறிந்த சிவசங்கர் எம்.எல்.ஏ, இந்த திட்டம் நிறை வேற்றப்படவுள்ள பகுதியில் விவசாய நிலங்கள், வீடுகள் பாதிக்கப்படும் பொது மக்கள்,

விவசாயிகளிடம் அரசு சார்பில் கருத்துகளை கேட்ட றிந்த பின்னர் இந்த திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு முன்வர வேண்டும் எனறார்.

கலந்து கொண்டவர்கள்

இந்த கூட்டங்களில் ஆலத் தூர் தி.மு.க ஒன்றிய செயலா ளர் கிருஷ்ணமூர்த்தி, கொட் டரை ஊராட்சி மன்ற தலைவர் ராஜமாணிக்கம், குரும்பாபாளையம் முன்னாள் ஊராட்சி தலைவர் ராஜேந் திரன், ஆதனூர் ஊராட்சி மன்ற தலைவர் முத்துலட்சுமி, ஒன்றியக்குழு உறுப்பினர் ரமேஷ், காட்டுராஜா, ஆலத் தூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுப்ரமணியன் உள்ளிட்ட தி.மு.க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

## ஜெயங்கொண்டம் பகுதியில் கடும் வறட்சியினால் ஏரி குளங்கள் வறண்டன முந்திரி மகசூல் பாதிப்பு: குடிதண்ணீருக்கு பொதுமக்கள் அவதி

ஜெயங்கொண்டம்,

ஜெயங்கொண்டம் பகுதி யில் கடும் வறட்சியினால் ஏரி குளங்கள் வறண்டன.இதனால் முந்திரி மகசூல் பாதிக்கப்பட்டது. குடிதண்ணீருக்கு பொதுமக்கள் அவதிப் படுகிறார்கள்.

வரலாறு காணாத வறட்சி

அரியலூர் மாவடடம் ஜெயங்கொண்டம், இலையூர், வாரியங்காவல், உடையார் பாளையம், வாண திரையன் பட்டணம், பெரியவளையம், பிச்சனூர், கல்லாத்துſர், தண் டலை உள்பட 100க்கும் மேற் பட்ட கிராமங்களில் ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் போனதால் பல ஆண்டுகளுக்கு பிறகு வரலாறு காணாத வறட்சியாலும் வெய்யிலின் தாக்கத்தினாலும் முந்திரி மகசூல் நடப்பு ஆண்டு கேள்வி குறியானது.சோழகங்கை எனும் பொன்னேரி உள்பட பாசன ஏரிகள் வற்றி வறண்டு காணப்படுகிறது.இதனால் நெல் உள்பட பல்வேறு விவசாய பயிர்களின் மகசூல் பாதிக்கப்பட்டது.இங்கு விளைவிக்கப்படு¢ம் முந்திரி தரமானதாகவும் 100 கோடி ரூபாய்க்கு மேல் அந்நிய செல வாணியை ஈட்டி தருவதும் ஆகும்.

மகசூல் பாதிப்பு

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளார்கள்.சராசரி யாக ஒரு ஏக்கரில் 300 கிலோ முதல் 500 கிலோ வரை மகசூல் கிடைக்கக் கூடிய சூழ்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியினால் 100 கிலோவிற்கு குறைவான மகசூல் கிடைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளார்கள்.வழக்க மாக கார்த்திகை மார்கழி பட்டங்களில் பயிர் செய்யப் பட்டுள்ள இறவை நிலக்கடலை மகசூலும் வறட்சியின் காரணமாக சொற்ப மகசூலே கிடைத்துள்ளது.பருவ மழை தவறியதின் காரணமாக நெல் மகசூலும் கிடைக்காமல் நிலக் கடலை மகசூலும் கிடைக் காமல் கால்நடைகளின் தீவனம் கிடைக்காமல் அல்லல் படும் சூழ்நிலை ஏற்பட்டுள் ளது. குடிநீர் தட்டுபாடும் தலை விரித்தாட தொடங்கி யுள்ளது.

குடிதண்ணீர் தட்டுப்பாடு

பெரியவளையம், புதுக்குடி, ஜெயங்கொண்டம் நகரின் சில பகுதிகள் மற்றும் பல்வேறு பகுதிகளில் குடிதண்ணீர் கிடைக்காமல் பொதுமக்கள் காலி குடங்களுடன் சைக்கிள் களிலும் நடைபயணமாகவும் குடிதண்ணீரை நாடிச் செல் லும் நிலை ஏற் பட்டுள்ளது.

கோடையின் ஆரம்பமே இப்படி இருக்கும் சூழ்நிலையில் இன்னும் சில நாட்களில் கடும் சூழ்நிலைக்கு தள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.விவசாயிகள் உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்க வேண்டுமென்றும் பொது மக்கள் குடிதண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

## பாலக்கோடு பகுதியில் மழை பொய்த்ததால் தக்காளி விளைச்சல் பாதிப்பு கூடை ஒன்று 140-க்கு விற்பனை

பாலக்கோடு,

பாலக்கோடு பகுதி யில் மழை பொய்த்து போனதால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட் டது. 15 கிலோ கொண்ட கூடை ஒன்று 140-க்கு விற்பனையாகிறது.

தக்காளி மார்க்கெட்

தர்மபுரி மாவட்டம் பாலக் கோடு, மாரண்டஅள்ளி, பென்னாகரம், வெள்ளிச் சந்தை, பஞ்சப்பள்ளி உள் ளிட்ட சுற்று வட்டார பகுதி களை சேர்ந்த விவசாயிகள் அதிக அளவில் தக்காளி பயிரிட்டு உள்ளனர். இந்த பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தக்காளி பயிர் செய்து வருகின்றனர். இங்கு விளையும் தக்காளிகள் தர மாகவும், ருசியாகவும் இருப் பதால் ஏராளமான வியாபாரி கள் வாங்கி செல்கின்றனர்.

பாலக்கோடு பகுதியில் விளையும் தக்காளிகள் அட்டை பெட்டிகளில் அடுக்கி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக் கும், மற்றும் அண்டை மாநில மான கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட

பகுதிகளுக்கு லாரி கள் மூலம் ஏற்றுமதி செய்யப் படுகிறது. ஈரோடு, சேலம் உள்ளிட்ட பக்கத்து மாவட் டங்களை சேர்ந்த வியா பாரி கள் நேரடியாகவே தக்காளி தோட்டத்திற்கே சென்று கொள்முதல் செய்து செய்கின் றனர்.

விளைச்சல் பாதிப்பு

இந்தாண்டு பருவ மழை பொய்த்து போனதால் தண்ணீர் இன்றி தக்காளி விளைச்சல் கடும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. விவசாயிகள் தங்களது தோட்டத்தில் இருந்து தக்காளிகளை பறித்து கொண்டு பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டுக்கு கொண்டு வருகின்றனர். அங்கு தற்போது ஒரு கூடை தக்காளி ரூ.100 முதல் 140 வரை விலை போகிறது.

இந்த தக்காளி மார்க்கெட் டுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 4 ஆயிரம் கூடை முதல் 5 ஆயிரம் கூரை தக்காளிகள் விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வருகின்றனர். கோடை மழை பெய்யாமல் போனால் இன்னும் 10 நாட்களில் 15 கிலோ எடை கொண்ட தக்காளி கூடை ஒன்று ரூ.400 முதல் 500 வரை விலை போகும் என விவசாயி கள் எதிர்பார்க்கின் றனர்.

விலை உயரும்

இதுகுறித்து விவசாயிகள் கூறும் போது தற்போது பாலக்கோடு மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் அதிக அளவில் தக்காளி பயிரிடப்பட்டு அறுவடை நடைபெற்று வருகிறது. இதனால் நாள் ஒன்றுக்கு மார்க்கெட்டுக்கு 4 ஆயிரம் கூடை தக்காளி விற்பனைக்கு வருகிறது. தற்போது மழை பொய்த்து போய் விட்டது. கோடை வெயிலுக்கு தோட் டத்தில் உள்ள தக்காளிகள் காய்ந்து வருகிறது. இன்னும் 10 நாட்களில் பருவமழை பெய்யாவிட்டால் தக்காளி விலை கடுமையாக உயர வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்தனர்.